திரு. செங்கை சிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய கல்வித் தரம் உயரும் அளவிலே பி.ஏ., வரலாறு, புவியியல் பட்டம் பெற்ற ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக அமர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, புவியியல் பாடம் பள்ளிகளிலே 4 மணி நேர அளவுக்குத்தான் நடத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தாலும் புவியியல் பாடத்தை நீண்டகாலமாகவே வரலாற்றுத் துறையிலே பட்டம் பெற்றவர்களே நடத்துவது என்பது மரபாக இருப்பதாலும், பி.ஏ. பட்டம் பெற்றவர்களை இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்க முறையில்லாத காரணத்தாலும் — வேண்டுமானால் அவர்களும் விண்ணப்பிக்கலாம், நேரடியாக நியமிக்க வாய்ப்பு இல்லை — இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிற முறை மாணவர்கள் தகுந்த முறையிலே தேர்வு எழுதுவதற்குப் போதுமானதாக இருக்கிற காரணத்தாலும், வேறுவிதமான ஆலோசனைக்கு இப்போது இடமில்லை.

திரு. செங்கை சிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, கணிதம், விஞ்ஞானம் போன்ற சிறப்புப் பாடங்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேறிய மாணவர்களுக்கு, அப்பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளித்து, மேலும் அவர்களை மேலைநாடுகளுக்கு அனுப்பி, சிறந்த வல்லுனர்களாக ஆக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியிலிருந்து அது எழவில்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட நல்ல நோக்கம் உண்டு. செயலாற்றுகிற வாய்ப்பு குறைவு.

(9-10 மணி)

ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஊக்க ஊதியத்தை உயர்த்துதல்

* 5258—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பல்கலைக் கழக மான்யக்குழு வழங்கும் ஊக்க ஊதியம் போன்று, தமிழ்நாடு அரசு ஊக்க ஊதியம் பெறும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஊக்க ஊதியம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) ஆராய்ச்சித் துறையிலே ஈடுபடுகிற மாணவர்களுக்குத் தமிழக அரசு வழங்கிவரும் ஊக்க ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கூறி சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பொருள் தொடர்பான பல்வேறு விவரங்கள் பல்கலைக் கழகங்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ளன.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஊக்க ஊதியத்தை உயர்த்துவது பரிசீலனையில் இருப்பதற்காக நன்றி தெரிவித்து, பல்கலைக் கழகங்கள் வழங்கும் ஊக்க ஊதியத் தொகையையும் உயர்த்துவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே. பல்கலைக் கழகங்கள் மூலமாக நடைபெறுகின்ற ஆராய்ச்சிகள் பல்வேறு அமைப்புகளினுடைய உதவித் தொகையைக் கொண்டு நடைபெறுகிறது. அந்தப் பல்வேறு அமைப்புகள் பல்கலைக்கழக மானியக்குழு, ICAR Indian Council of Agricultural Research, Indian Council of Medical Research, Council of Scientific and Industrial Research, Indian Council of Social Sciences Research, ICHR, மாநில அரசு உதவித்தொகை வழங்குகிற திட்டம், இப்படிப்பட்ட பல்வேறு அமைப்புகள் மூலமாக வெவ்வேறு விதமான படிப்புக்கு, அந்தந்த படிப்புக்கு ஆய்வுக்கு வருகிற மாணவர்கள் தேவைப்படுவதைப் பொறுத்து அந்தந்த அமைப்புகள் உதவி நிதியைத் தீர்மானிக்கின்றன. அரசு வழங்குகிற நிதியை உயர்த்த முடியுமா என்பது ஆய்வு செய்யப்படுகிறது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே பி.எச்டி. ஆராய்ச்சி மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க பல்கலைக் கழக கல்வி ஆணைக்குழு (UGC) நடத்தும் தேர்வு அகில இந்திய அளவில் நடைபெறுகிறது. அந்தத் தேர்வில் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அதிக அளவில் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது என்பதை அரசு உணர்ந்து இருக்கிறதா? அதற்கு ஏதேனும் சிறப்புத் திட்டம் அரசு வைத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக்குழு, ஆய்வுத் துறையிலே ஈடுபடுகிறவர்களுக்குச் சில வரன்முறைகளுக்கு உட்பட்டு உதவித் தொகையைத் தீர்மானிக்கிறது. அந்த வரன்முறைகளில் வெற்றி பெற்றவர்கள்தான் இடம் பெற முடியும். அந்த ஆராய்ச்சிப் பகுதி பொதுவான கல்வியிலே மேம்பாடு பெறுவது என்ற நோக்கத்தோடு இடம் பெறுவதல்ல, இதிலே ஊக்கம் கொண்டவர்கள்,

இதிலே ஆர்வம் என்று காட்டுகிறவர்கள் மிகச் சில ராகத்தான் இருப்பார்கள். எனவே அவர்களைப் பொறுத்து தனித்தனியாகத்தான் ஆய்வு செய்ய முடியும்,

சிறைக் கைதிகளுக்குத் தொலைக்காட்சி வசதி.

*4054—திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சிறைக் கைதிகளுக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளின் மன மகிழ் விற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும், தொலைக்காட்சி பெட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) தற்போது சென்னை மத்தியச் சிறையில் 24 தொலைக் காட்சிப் பெட்டிகளும், மதுரை மத்திய சிறையில் 4 தொலைக் காட்சிப் பெட்டிகளும், திருச்சி மத்திய சிறை, மதுரை பெண்கள் தனிச் சிறை மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளில் தலா ஒரு தொலைக்காட்சி பெட்டியும் அமைக்கப் பட்டு இருக்கின்றன. இதர மத்திய சிறைகளிலும் சிறைவாசி களின் தேனீர் விடுதி மூலம் கிடைக்கும் இலாபத் தொகை யிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. சிறைவாசிகளின் பயன் கருதித் தொண்டு நிறுவனங்கள் அன்பளிப்பாக அளிக்கின்ற தொலைக் காட்சிப் பெட்டிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குற்றஞ்சாட்டப்பட்டு இருக்கின்ற கைதிகள் உள்ள சிறை களிலும் அதனை விரிவுபடுத்த முடியுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது அது போன்ற யோசனை இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறையிலும் தொலைக்காட்சிப் பெட் டிகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் திருச்சி சப்ஜெயிலில் 6 நாட்களாக அடைக்கப்பட்டு இருந்தோம். அப்போது அங்கு அந்தப் பெட்டிகள் இருந்திருந் தால் காட்டியிருப்பார்களே. திருச்சியில் பெண்கள் பகுதியில் அது இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கான ஏற்பாடு செய்வதற்கு வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.